# மாற்றுத் திறனாளிகளின் குரல் விரைவில் உள்ளாட்சி மன்றங்களில் ஒலிக்கும்!

## நன்றி - பாராட்டு விழாவில் முதல்வர் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

பாராட்டுக்களையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சகோதர உணர்வோடு விழாவுக்கு வந்துள்ளேன்!**

மாற்றுத் திறனாளிகளான நீங்கள் தலைவர் கலைஞர் அவர்களின் உள்ளத்தில் எப்போதும் நிறைந்தவர்கள்! நாம் எல்லோரும் சகோதர சகோதரிகள் என்ற உணர்வுடன் இன்னும் சொல்ல வேண்டும் என்றால், தலைவர் கலைஞர் அவர்கள் “உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே” என்று சொல்வாரே அந்த பாச உணர்வுடன் வந்திருக்கிறேன்!

இங்கே எனக்கு முன்னால் பேசியவர்கள் என்னைப் பாராட்டி பேசியபோது, அதையெல்லாம் நான் பாராட்டாக எடுத்துக்கொள்ளவில்லை; என் மேல் நீங்கள் வைத்திருக்கின்ற நம்பிக்கைக்கு நான் உழைப்பதற்கு ஊக்கமாக எடுத்துக்கொள்கிறேன்! அதேபோல, கோரிக்கைளையும் வேண்டுகோளாகவும் சொல்லியிருக்கிறீர்கள். உங்களுக்கே தெரியும் - என்றும் நான் உங்களில் ஒருவன். உங்களுக்கான அனைத்தையும் நிச்சயம் படிப்படியாக நிறைவேற்றியே தீருவேன்.

தலைவர் கலைஞர் சொன்னதுபோல, ‘நான்’ என்பதைவிட ‘நாம்’ என்ற சொல்லுக்குதான் வலிமை அதிகம்! அதனால்தான், ஆட்சிப் பொறுப்பேற்றவுடனே இது, எனது அரசு அல்ல; நமது அரசு என்று சொன்னேன்!

**எல்லோருக்கும் எல்லாம் என்பதே திராவிட மாடல் அரசின் நோக்கம்!**

“வாருங்கள் நாம் அனைவரும் சேர்ந்து நமது கனவுகளை நிறைவேற்றிக் கொள்வோம்” என்று சொன்னேன். அதனால்தான், எல்லாருக்கும் எல்லாம் என்ற பொருள்பட திராவிட மாடல் அரசு என்று நம்முடைய அரசுக்கு பெயர் வைத்தேன். திராவிட மாடல் என்றால், சமூகநீதி சமத்துவம் சமதர்மம் சகோதரத்துவத்தை காக்கக்கூடிய அரசு!

ஏழை எளியவர்கள் ஒடுக்கப்பட்டோர் ஒதுக்கப்பட்டோர் விளிம்புநிலை மக்கள் பெண்கள் இளைஞர்கள் முதியோர் மாற்றுத் திறனாளிகள் திருநர் என்று அனைவரையும் உள்ளடக்கிய அரசு இது!

இது ஏதோ அரசியலுக்காக, தேர்தலுக்காக செய்வது இல்லை; உள்ளார்ந்த அன்புடன் செய்வது! என் பிறந்தநாள் அன்றைக்கு, இங்கே நம்முடைய நண்பர் குறிப்பிட்டுச் சொன்னார், காலையில் தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா தலைவர் கலைஞர் ஆகியோருடைய நினைவிடத்திற்கு சென்று மரியாதை செலுத்திவிட்டு, அண்ணா அறிவாலயத்திற்குச் சென்று அங்கே தோழர்கள், நண்பர்களிடத்தில் எல்லாம் வாழ்த்துகளைப் பெற்று, பொதுமக்களிடமும் வாழ்த்துகளைப் பெற்று, கடைசியாக என்னுடைய மனம் முழு நிறைவு எப்பொழுது அடையும் என்று சொன்னால், இங்கே அருகே இருக்கக்கூடிய மாற்றுத்திறன் கொண்ட பள்ளிக் குழந்தைகள் பயிலக்கூடிய சிறுமலர் பள்ளியில், அவர்களுடன் இருந்து, அவர்களுடைய புன்னகையை வாழ்த்தாக பெறும்போதுதான், அந்த நாளே எனக்கு முழுமை அடையும்! இன்றைக்கு நேற்று இல்லை, 1984ல் இருந்து, தொடர்ந்து 42 ஆண்டுகளாக சிறுமலரில்தான் என்னுடைய மகிழ்ச்சி முழுமை அடைகிறது! அதனால்தான், தலைவர் கலைஞர் வழித்தடத்தில், மாற்றுத் திறனாளிகளின் உரிமைகளை நிலைநாட்ட தொடர்ந்து செயல்பட்டு வந்து கொண்டிருக்கிறோம்!

**சமூக நீதி உரிமையை சட்டமாக்கியுள்ளோம்!**

இத்துடன் முத்தாய்ப்பாகதான் உங்களுக்கான கோரிக்கையை நீங்களே ஒலிக்கவேண்டும் என்று உள்ளாட்சி அமைப்புகளில் ஒரு மாற்றுத் திறனாளி உறுப்பினர் இடம் பெறுவார் என்று மாபெரும் சமூகநீதி உரிமையை சட்டமாக்கியிருக்கிறோம்!



சென்னை, வள்ளுவர் கோட்டத்தில், நேற்று முன்தினம் (21.6.2025) உள்ளாட்சிப் பொறுப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு பங்கேற்புரிமை வழங்கி, சமூக நீதியை நிலைநாட்டியதற்காக மாற்றுத்திறனாளிகள் ஒருங்கிணைப்புக் குழு சார்பில் நடைபெற்ற நன்றி பாராட்டும் விழாவில் கலந்து கொள்ள வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு மாற்றுத்திறனாளிகள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

### சமத்துவம் உருவாகக் கூடாது என நினைக்கின்ற வகுப்புவாதிகள்தான் தி.மு.க. அரசு மீது பாய்கிறார்கள்!

இதன் மூலம், 13 ஆயிரத்து 357 மாற்றுத்திறனாளிகள் உள்ளாட்சி அமைப்புகளில் உறுப்பினர்களாக நியமனம் செய்யப்படுவார்கள். தற்போது உடனடியாக நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில், 650 மாற்றுத்திறனாளிகளும், ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் 2 ஆயிரத்து 984 மாற்றுத் திறனாளிகளும் நியமிக்கப்படுவார்கள்.

**உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத் திறனாளி உறுப்பினராக இடம்!**

மாவட்ட வாரியாக, ஜூலை 1 முதல் விண்ணப்பங்கள் பெறப்பட்டு பரிசீலனை செய்யப்படும். மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் குழுவில், மாவட்ட அளவிலான மாற்றுத்திறனாளிகள் குழுவில் இருக்கின்ற உறுப்பினர் ஒருவர் இடம் பெற்றிருப்பார். நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்கள் மன்ற கூட்டங்களில் பங்கேற்கலாம். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினருக்கு வழங்கப்படுவது போல மதிப்பூதியம் வழங்கப்படும். உறுப்பினர்களுக்கு உள்ள கடமைகள் மற்றும் அதிகாரங்களை மேற்கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அதனால், உங்கள் எல்லோருக்கும் என்னுடைய மனமார்ந்த வாழ்த்துகள்! பாராட்டுக்கள்!

மாற்றுத் திறனாளி தோழர்களுடைய வாழ்வு வளம்பெற எதிர்காலம் ஏற்றம்பெற நம்முடைய திராவிட மாடல் அரசில் ஏராளமான திட்டங்களையும், முன்னெடுப்புக்களையும் செய்து கொண்டிருக்கிறோம்! அதனையெல்லாம் இப்போது சொல்லவேண்டிய அவசியமில்லை. உங்களுக்கே நன்றாக தெரியும்.

அதுமட்டுமல்ல, இங்கே பேசிய நம்முடைய அருமை நண்பர் தீபக் அவர்கள், கோரிக்கையோடு என்னை சந்திக்க வந்த போது மாற்றுத் திறனாளிகளுக்கு தி.மு.க ஆட்சிக்கு வந்து நாம் செய்து கொடுத்திருக்கக்கூடிய 60க்கும் மேற்பட்ட அரசாணைகளை புத்தகமாகவே தயாரித்து வழங்கியிருந்தார். அவர் மறந்திருக்க மாட்டார். அவரே பலமுறை என்னிடத்தில் சொல்லியிருக்கிறார். அந்த அளவுக்கு சாதனை செய்திருக்கிறோம். இனியும் செய்வோம். செய்து கொண்டே இருப்போம். நம்முடைய அரசின் சேவைகள் அனைத்தையும் நீங்கள் படிக்கவேண்டும்.

இங்கே வருகை தந்திருக்கின்ற மாற்றுத்திறனாளிகள் சங்கங்களின் பிரதிநிதிகள், மாற்றுத்திறனாளிகளின் சேவைகளுக்காக அயராது பணி செய்கின்ற நல்ல உள்ளங்கள் அரசுடன் இணைந்து செயல்படவேண்டுகிறேன். Inclusive சமூகமாக நாம வளரவேண்டும்!

**சவால்களை வென்று சாதிக்கும் மாற்றுத் திறனாளிகள்!**

இன்றைக்கு மாற்றுத் திறனாளிகள் அனைத்துத் துறைகளிலும் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். உயர்ந்த இடங்களை அடைந்திருக்கிறார்கள், விருதுகளை வாங்கி இருக்கிறார்கள். சமூகத் தடைகளை உடைத்து முன்னுக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். சவால்களை வென்று வருகிறார்கள். பிறப்பினாலோ, உடல்நலக் குறைவாலோ அல்லது விபத்தினாலோ பாதிக்கப்பட்டவர்கள் அந்த பாதிப்பிலிருந்து மீளமுடியும், மற்றவர்களைப் போல நாங்களும் வெல்ல முடியும் என்பதை மெய்ப்பித்துக் கொண்டு வருகிறீர்கள். இத்தகைய அனைவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்கள்! வாழ்த்துகள்!

“முயற்சி திருவினை ஆக்கும், முயற்றின்மை இன்மை புகுத்தி விடும்” என்று சொன்னார் வள்ளுவர். முயற்சி செய்தால் எதுவும் முடியும் என்பதை உண்மையில் நிரூபித்து வருகிறவர்கள் மாற்றுத் திறனாளிகள்தான். உங்களுக்கு நான் சொல்வது, உங்களுக்கு நான் இருக்கிறேன்; இந்த அரசு இருக்கும் என்கின்ற நம்பிக்கையுடன் செயல்படுங்கள். உங்களுக்கான அனைத்து வாய்ப்புகளையும் வழங்குவது என்னுடைய கடமை!

**எல்லோரும் முன்னேறுவது சிலருக்குப் பிடிக்கவில்லை!**

இது எல்லாருக்குமான ஆட்சி, எல்லாரையும் முன்னேற்றுகின்ற ஆட்சி. அதனால்தான் சில வகுப்புவாத சக்திகளால் அவர்களுக்கு துணை போகின்ற கொத்தடிமைக் கூட்டத்தால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. எல்லோரும் முன்னேறுவது சிலருக்கு பிடிக்கவில்லை. எல்லோரும் முன்னேறக் கூடாது; எல்லார்க்கும் சமூக நீதி கிடைக்கக்கூடாது; சமத்துவம் உருவாகக் கூடாது என்று நினைக்கின்ற வகுப்புவாதிகள்தான் திமுக அரசு மீது பாய்கிறார்கள்!

அதையெல்லாம் அரசியல் களத்தில் முறியடிக்கக்கூடிய வலிமையை தருவது, நீங்களும் - மக்களும் தருகின்ற அன்புதான்! அந்த வகையில், என் மனதுக்கு இதமாக இத்தகைய விழாவை ஏற்பாடு செய்திருக்கின்ற மாற்றுத் திறனாளி சகோதார சகோதரிகள் அனைவருக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றி!

வள்ளுவம் வாழ்வியல் நெறியாக மாறட்டும்! சமுதாயம் குறள் சமுதாயமாக மலரட்டும்! என்று கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

### அலிசேக் மீரான் தலைமையில் மும்பை புறநகர் தி.மு.க.

## ஆரே காலனி கிளைக் கழகம் சார்பில் கலைஞர் பிறந்த நாள் - நலஉதவிகள்!

### அமைச்சர் கோவி.செழியன் வழங்குகிறார்!

மும்பை, ஜூன்.23-

மும்பை புறநகர் திராவிட முன்னேற்றக் கழகம் ஆரே காலனி கிளைக் கழகம் சார்பில் வருகிற (28-06-2025 - சனிக்கிழமை) மாலை 6.00 மணியளவில் ஆரே காலனி, யூனிட் எண்.7, நெல்லை விநாயகர் கோவில் திடலில் வைத்து முத்தமிழறிஞர் கலைஞரின் 102 ஆவது பிறந்தநாள் விழா வெகுச் சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா மும்பை புறநகர் மாநிலப் பொறுப்பாளர் அலிசேக் மீரான் தலைமையில் நடைபெறவுள்ளது. விழாவில் தமிழ்நாடு அரசு உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றவுள்ளார். பொறுப்புக்குழு உறுப்பினர்களான சிவக்குமார் சுந்தர்ராஜ் வரவேற்புரையும் முனைவர் வதிலை பிரதாபன் தொடக்கவுரையும் ஆற்றுகிறார்கள்.

தந்தை பெரியார் படத்தை பொறுப்புக் குழு உறுப்பினர் ஜேம்ஸ் தேவ தாசனும், பேரறிஞர் அண்ணா படத்தை ஆரே காலனிக் கிளைக் கழக முன்னோடி கு.தர்மலிங்கமும், முத்தமிழறிஞர் கலைஞர் படத்தை மாநில இளைஞரணி அமைப்பாளர் ந.வசந்தகுமாரும் திறந்து வைக்கிறார்கள்.

விழாவில், கழக உறுப்பினர் உரிமை அட்டைகளை கழகத் தோழர்களுக்கு வழங்குவதுடன் அந்தப் பகுதிவாழ் மக்களுக்கு நலத்திட்ட உதவிகளையும் அமைச்சர் கோவி. செழியன் வழங்கவுள்ளார்.

பொறுப்புக் குழு உறுப்பினர்கள் பி.கிருஷ்ணன், அ.இளங்கோ, வே. சதானந்தன், வெ.அ. ஜெய்னுலாபுதீன் வீரை சோ.பாபு, மெஹபூப் பாஷா சோ.பா. குமரேசன், சிலுவை தாசன், மற்றும் மும்பை திராவிடர் கழகத் தலைவர் பெ.கணேசன், பகுத்தறிவாளர் கழகத் தலைவர் அ.இரவிச்சந்திரன், கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் பாவலர் நெல்லை பைந்தமிழ், புறநகர் தி.மு. கழகப் பேச்சாளர் முகமதலி ஜின்னா பாண்டு, (ஆரே காலனி கிளை) இளைஞரணித் துணை அமைப்பாளர் கவிஞர் வீரமணி, இலக்கிய அணித் துணை அமைப்பாளர் பொய்சர் மூர்த்தி, ஆரெ காலனி காங்கிரஸ் கமிட்டிப் பேச்சாளர் செல்லக்கண்ணு ஆகியோர் வாழ்த்துரை வழங்குகிறார்கள்.

ஆரே காலனிக் கிளைக் கழகத்தைச் சேர்ந்த தோழர்கள் - சேகர் சுப்பையா, கனகராஜ், தமிழ்ச் செல்வன், சுரேஷ் குமார், கட்டமுத்து, முனியன் கோவிந்தராஜ், கிருஷ்ண மூர்த்தி கணேசன், பொன்னுசாமி ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பிக்கிறார்கள்.

க.ஜீவானந்தம் (கல்யாண் கிளைக் கழகம், தமிழினநேசன் (ஜோஹேஸ்வரி கிளைக் கழகம்) அ. பாலமுருகன் தானே கிளைச் செயலாளர், எஸ். பெருமாள் முலுண்டு கிளைச் செயலாளர், வாஷி கிளைக்கழகச் செயலாளர் பழனி, அ. பால சுப்ரமணியம் (முலுண்ட் கிளை) எஸ். பி. செழியன் (மால்வாணி திமுக) முத்தமிழ் தண்டயாணி (அம்பர்நாத்) முஸ்டாக் பாய் (பீவாண்டி கிளை, அ.பால முருகன் (தானே கிளை), வாஷி கிளைக் கழகத் தோழர்கள், தில்லை, ஆறுமுகம், எம்.இ.முத்து, குலசேகரன், ஜி.பசுபதிநாதன், சு.சுடலையாண்டி சயான் கிளைக் கழகச் செயலாளர் நம்பி (செம்பூர் கிளைக் கழகம்) ஆழ்வார் சீத்தா கேம்ப் கிளைக்கழகம் ராஜேந்திரன், ஜஸ்டின் அம்பர்நாத் கிளைக் கழகச் செயலாளர், வேல்முருகன் திவா கிளைக்கழகச் செயலாளர் எம்.பொன்மணி அந்தேரி மேற்கு தி.மு. கழகம் விஜயகுமார் (கோரெகாவ்ன் கிளை) பரமசிவம் (செம்பூர்) பாண்டுப் செல்லத்துரை, உதயசூரியன், ஆனந்தரமேஷ் (அம்பர்நாத் கிளை) க.சுந்தர், மாரி, (பாண்டுப் கிளை) செய்யது பாய், ராமு, (அம்பர்நாத் கிளை) ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

இறுதியில் ஆரே காலணிக் கிளைக் கழக முன்னோடி துரைராஜ் நன்றியுரையுடன் விழா நிறைவுறுகிறது.

மும்பையின் பல்வேறு பகுதிகளில் வசிக்கும் கழக உணர்வாளர்கள் யாவரும் விழாவில் கலந்து மகிழும் படி அன்புடன் அழைக்கப்படுகிறார்கள்.

---

### மொழிப்போர்த் தியாகி

## வாசுதேவநல்லூர் இல.குட்டியப்பன் மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



சென்னை, ஜூன் 23–

தென்காசி வடக்கு மாவட்டம், மொழிப்போர்த் தியாகி வாசுதேவ நல்லூர் இல. குட்டியப்பன் மறைவு எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். மறைவு செய்தி அறிந்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:–

கழகத் தீவிர பற்றாளரும் மொழிப்போர் தியாகியுமான வாசுதேவநல்லூர் இல.குட்டியப்பன் அவர்கள் இயற்கை எய்திய செய்தி கேட்டு அதிர்ச்சியுற்றேன்.

கடந்த 40 ஆண்டு காலமாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் முழு நேர ஊழியராக பணி புரிந்து பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறைச் சென்று திருமணம் கூட முடிக்காமல் முழு நேர கழகப் பணியாளராக பணியாற்றிய அன்னாரது தியாகத்தை போற்றிடுவோம்.

அன்னாரை இழந்து வாடும் மாவட்டக்கழகநிர்வாகிகளுக்கும் குடும்பத்தாருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

---

### கோவில் பூசாரிகளுக்கு நலத்திட்டங்கள் வழங்கி வரும்

## முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி!

### திருவாரூரில் தமிழ்நாடு கோவில் பூசாரிகள் சங்கம் தீர்மானம்

மன்னார்குடி,ஜூன் 23-

கோவில் பூசாரிகளின் நலன் கருதி பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வரும் தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவித்து தமிழ்நாடு கோவில் பூசாரிகள் நலச்சங்கம் சார்பில் மன்னார்குடியில் நேற்று முன்தினம் நன்றி அறிவிப்பு மாநாடு நடந்தது.

தமிழ்நாடு முதலமைச்ச ராக மு க ஸ்டாலின் பொறுப்பேற்ற பிறகு மக்கள் நலன் சார்ந்த பல்வேறு திட்டங்களை அறிவித்து அவற்றை நடைமுறைப்படுத்தி வருகிறார். அந்த வகையில், கடந்த 20 வருடங்களாக மாத ஊதியம் இல்லாமல் பணியாற்றி வந்த 19 ஆயிரம் பூசாரிகளுக்கு தற்போது மாத ஊக்கத் தொகையாக ரூபாய் 1500 வழங்கப்பட்டு வருகிறது. கிராமப்புற கோயில்களுக்கு திருப்பணி நிதி ரூ 2.50 லட்சம் முயற்சி வழங்கப்படுகிறது. 60 வயதைக் கடந்த மூத்த பூசாரிகள் 5 ஆயிரம் பேருக்கு மாத ஓய்வூதியம் ரூபாய் 4 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படுகிறது.

ஒரு கால பூஜை நடந்த கோயில்களின் எண்ணிக்கையை 12 ஆயிரத்திலிருந்து 19 ஆயிரம் ஆக விரிவு படுத்தி அந்தக் கோயில்களுக்கான மின் கட்டணத்தை அரசே ஏற்றுக் கொண்டது.

முன்னாள் முதல்வர் கலைஞர் ஆட்சிக் காலத்தில் பூசாரிகளுக்கு இலவச மிதிவண்டி வழங்கினார். அந்தத் திட்டத்தை விரிவுபடுத்தி 12 ஆயிரம் பூசாரிகளுக்கு ஸ்கூட்டர் வாங்க 12 ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது. எந்த ஆட்சிக் காலத்திலும் இல்லாத வகையில் பொறுப்பேற்ற நான்கு வருடத்திற்குள் குமார் 3500 திருக்கோவிலுக்கு குடமுழுக்கு நடத்தி சாதனை படுத்தியது உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் மூலம் ஆன்மீக தலத்திலும் திமுக அரசு முத்திரை பதித்து வருகிறது.

இந் நிலையில்,கோவில் பூசாரிகளின் நலன் கருதி பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வரும் தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவித்து தமிழ்நாடு கோவில் பூசாரிகள் நலச்சங்கம் சார்பில் திருவாரூர் மாவட்ட நன்றி அறிவிப்பு மாநாடு மன்னார்குடியில் நேற்று நடந்தது. ராஜா கோபாலசாமி கோயில் அறங்காவலர் குழு தலைவர் கருடர் இளவரசன், மாவட்டச் செயலாளர் சேட்டு, மாவட்டத் துணைத் தலைவர் கலியமூர்த்தி, ஆலோசனை குழு தலைவர் ஆனந்தன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்டத் தலைவர் கோவிந்தராஜ் வரவேற்றார்.

மாநாட்டிற்கு தமிழ்நாடு கோயில் பூசாரிகள் நலச்சங்க மாநில தலைவர் வாசு தலைமை வகித்து நலவாரிய உறுப்பினர் படிவங்களை வழங்கியும், மூத்த பூசாரிகளின் சேவையை பாராட்டி அவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கியும், தீர்மானங்களை விளக்கியும் பேசினார்.

மாநாட்டில், கிராமப்புற திருப்பணி கமிட்டியில் பூசாரிகளுக்கும் வாய்ப்பு வழங்க வேண்டும். நல வாரிய உறுப்பினர் சேர்க்கைக்கு வருமானச் சான்று சமர்ப்பிக்க வேண்டியதில்லை என உத்தர விட வேண்டும்.

நலவாரியம் மூலம் பூசாரிகளுக்கு நிதி வழங்க உரிய நிதி ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுபோல் உறுப்பினர் பதிவு கட்டணம் பெறுவதை ரத்து செய்ய வேண்டும். ஒரு கால பூஜை நடைபெறும் கோவில்களில் பணியாற்றும் பூசாரிகளுக்கு அடையாள அட்டை வழங்க வேண்டும். ஓய்வூதியம் கோரி விண்ணப்பிக்கும் பூசாரிகளின் விண்ணப்பங்களை 30 நாட்களுக்குள் விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒரு கால பூஜை நடைபெறும் கோவில் பூசாரி களுக்கு துரை ரீதியாக ஓய்வூதிய பெற நிதி ஒழிப்பு செய்ய வேண்டும். திருக்கோயில் ஆமணங்களிலும் வருவாய்த்துறை ஆவணங்களிலும் பசலி என்ற அந்நிய சொல்லை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பூசாரிகளுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி முகாம் மாவட்டம் நடத்த வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன. முடிவில் மாவட்ட மகளிர் அணி தலைவி மூர்த்தி தென்மொழி நன்றி கூறினார்.

---

### வால்பாறை தொகுதி அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்

## அமுல் கந்தசாமி மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூன் 23–

வால்பாறை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அமுல் கந்தசாமி அவர்களின் மறைவையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:–

வால்பாறை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அமுல் கந்தசாமி அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகவும் வருத்த மடைந்தேன்.

அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், வால்பாறை தொகுதி மக்களுக்கும், அ.தி.மு.க. கட்சியினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.